| Register Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

# பகுதி I — தமிழ் — முதல் தாள்

( செய்யுளும், இலக்கணமும் )

# Language — Part I — TAMIL — Paper I

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு* : 1) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினவாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

2) வினா எண் VI க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***நான்கனுக்கு*** ( *ஐந்து ஐந்து வரிகளில்* ) விடை எழுதுக : $4 \times 2 = 8$

1. எட்டுத்தொகை நூல்கள் யாவை ?
2. ஒறுத்தாரும் பொறுத்தாரும் எய்துவன யாவை எனக் குறள் கூறுகிறது ?
3. வீரமாமுனிவர் இயற்றிய நூல்கள் யாவை ?
4. அந்தாதி - விளக்குக.
5. சிறுவர்களுக்குக் காகிதக் கப்பல் விட ஒய்வில்லாதது ஏன் எனக் கவிக்கோ கூறுகிறார் ?
6. அற்புதப் பழ ஆவணம் காட்டி இறைவன் சுந்தரரை ஆட்கொண்ட ஊர் யாது ?

[ *Turn over*

**II.** பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** ( *பத்துப் பத்து வரிகளில்* ) விடை எழுதுக : $3 \times 4 = 12$

7. 'நன்றே நம்பி குடிவாழ்க்கை' எனக் கம்பர் வியந்து கூறுவதன் நயத்தை விளக்குக.

8. தலைவியைச் சந்தித்துச் செல்லும் தலைவனிடம் தோழி வரைவு கடாயவற்றை நக்கண்ணையார் வழி விளக்குக.

9. வினைத் திட்பத்தின் சிறப்பும், அஃதுடையார் எய்தும் பயனும் குறித்து திருவள்ளுவர் எவ்வாறு விளக்கியுள்ளார் ?

10. தாவீதன் கோலியாத்தினை வென்றமை யாங்ஙனம் ?

11. பேழையை மீட்டுத் தருமாறு அன்னம் வேலனை எவ்வாறு வேண்டிக் கொண்டாள் ?

**III.** பின்வரும் வினாக்களுக்குள் எவையேனும் ***மூன்றனுக்கு*** ( *பத்துப் பத்து வரிகளில்* ) விடை எழுதுக: $3 \times 4 = 12$

12. இராசராச சோழனின் வில், வாள், முரசு, கொடி, குடை குறித்துக் கூறப்பட்டன யாவை ?

13. தென்கரை நாட்டின் வளம் குறித்து முக்கூடற்பள்ளு உரைப்பனவற்றை எழுதுக.

14. 'மனித நேயம்' பற்றிக் கவிஞர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் குறிப்பிடுவன யாவை ?

15. சிக்கனத்தால் வரும் பயன்கள் யாவை எனக் கவிஞர் சுரதா கூறியுள்ளார் ?

16. குலசேகர ஆழ்வார் திருமாலிடம் வேண்டுவதும் வேண்டாததும் யாவை ?

**IV.** பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ***ஒன்றனுக்கு*** ( *இருபது வரிகளில்* ) விடை எழுதுக. $1 \times 8 = 8$

17. 'அறிவுடைமை' என்னும் அதிகாரம் வெளிப்படுத்தும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

18. மருண்மாலைப் போதில் கண்ணகி இணைந்து ஏங்கி உரைத்தவற்றையும், கோவலனைக் கண்டபொழுது நிகழ்ந்த அற்புதத்தையும் வரைக.

19. பாரதியார் காட்டும் அந்திவான வருணனையைத் தொகுத்து வரைக.

V. பின்வரும் செய்யுளின் கீழ்க் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக. 4 × 1 = 4

20. ''நல்லது செய்த லாற்றீ ராயினும்

அல்லது செய்த லோம்புமின்....''

அ) இப்பாடல் இடம் பெற்ற நூல் எது ?

ஆ) இப்பாடலின் ஆசிரியர் யார் ?

இ) ஆற்றீராயினும் எது ?

ஈ) ஓம்புமின் - எது ?

அல்லது

21. ''இற்பிறப் பென்ப தொன்றும் இரும்பொறை யென்ப தொன்றும்

கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன்''

அ) இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது ?

ஆ) 'களிநடம் புரியக் கண்டேன்' எனக் கூறியவர் யார் ?

இ) இக்கூற்று யாரிடம் கூறப்பட்டது ?

ஈ) இத்தொடரின் பொருள் யாது ?

VI. 22. ''நண்ணுமிளமை'' எனத் தொடங்கும் மொழிவாழ்த்துச் செய்யுளை அடிபிறழாமல் எழுதி அதன் பாவகையையும் எழுதுக. 4 + 2 = 6

23. 'மறவற்க' எனத் தொடங்கும் குறட்பாவையும் 'உடைத்து' என முடியும் குறட்பாவையும் அடிபிறழாமல் எழுதுக. 2 + 2 = 4

VII. 24. எவையேனும் ***இரண்டு*** சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. 2 × 2 = 4

| | | |
|---|---|---|
| அ) செய்தல் | ஆ) எய்தி | இ) காண்பன் |
| ஈ) விடுவார் | உ) புக்கேன் | ஊ) அஞ்சினர். |

25. கீழ்க் கோடிட்ட தொடர்களுள் ***மூன்றனுக்கு*** இலக்கணக் குறிப்பு எழுதுக. **3 × 2 = 6**

அ) <u>கூர்ம்படை</u> ஆ) <u>சோணாடு</u>

இ) <u>அலைகடல்</u> ஈ) <u>மாமலை</u>

உ) <u>செய்க</u> ஊ) <u>ஓரீஇ.</u>

26. எவையேனும் ***இரண்டு*** தொடர்களுக்குப் புணர்ச்சி விதி தருக. **2 × 2 = 4**

அ) வண்டினம் ஆ) மாசற்றார் இ) கற்பெனும்

ஈ) பூங்கொடியாள் உ) வெஞ்சுடர் ஊ) பெருந்தெய்வம்.

27. சான்று தந்து விளக்குக. **1 × 4 = 4**

பொருண்மொழிக் காஞ்சித் துறை *அல்லது* நெய்தல் திணை.

28. ''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை

இகழ்வார்ப் பொறுத்தல் தலை.''

- இச்செய்யுளில் அமைந்த அணியைச் சுட்டி விளக்குக.

அல்லது

சொற்பொருட் பின்வருநிலையணி அல்லது திரிபு அணியை விளக்கி எடுத்துக்காட்டு தருக. **1 × 4 = 4**

VIII. பொருத்துக. **4 × 1 = 4**

| | **நூல்** | | **சமயம்** |
|---|---|---|---|
| 29. | மணிமேகலை | — | சமணம் |
| 30. | நீலகேசி | — | கிறித்துவம் |
| 31. | இரட்சணிய யாத்திரிகம் | — | இசுலாம் |
| 32. | சீறாப்புராணம் | — | பௌத்தம் |
| | | — | வைணவம். |

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 16 × 1 = 16

33. 'ஒன்றே யென்னின்' என்னும் கடவுள் வாழ்த்துப் பாடல் அமைந்துள்ள காண்டம்

அ) அயோத்தியா காண்டம்

ஆ) சுந்தர காண்டம்

இ) யுத்த காண்டம்.

34. புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள்

அ) 11

ஆ) 65

இ) 75.

35. அகநானூறு மணிமிடைப்பவளத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை

அ) 100

ஆ) 120

இ) 180.

36. கபிலரை 'வாய்மொழிக் கபிலர்' என்று போற்றியவர்

அ) நக்கீரர்

ஆ) பெருங்குன்றூர்க் கிழார்

இ) மாறோக்கத்து நப்பசலையார்.

37. திருக்குறளின் பெருமையை உணர்த்துவது

அ) பழமொழி

ஆ) திருவள்ளுவமாலை

இ) நாலடியார்.

[ Turn over

38. சிலப்பதிகாரத்திலுள்ள காண்டங்கள்

அ) மூன்று

ஆ) ஆறு

இ) முப்பது.

39. சிறிய திருவடி என்றழைக்கப்படுபவர்

அ) கருடன்

ஆ) அனுமன்

இ) வீடணன்.

40. 'கொன்ஸ்டான்' என்னும் சொல்லுக்குப் பொருள்

அ) கொன்றவன்

ஆ) அஞ்சாதவன்

இ) வேற்று நாட்டவன்.

41. வடமொழியில் பாரதம் பாடியவர்

அ) வான்மீகி

ஆ) வியாசர்

இ) காளிதாசர்.

42. தமிழில் தோன்றிய முதல் கலம்பகம்

அ) மதுரைக் கலம்பகம்

ஆ) நந்திக் கலம்பகம்

இ) காசிக் கலம்பகம்.

43. 'பிரபந்தம்' என்னும் வடசொல் உணர்த்தும் பொருள்

அ) நகைச்சுவை நூல்

ஆ) நன்கு கட்டப்பட்டது

இ) அறிவுரை நூல்.

44. செந்தமிழைச் செழுந்தமிழாகக் காண விரும்பியவர்

அ) பாரதியார்

ஆ) பாரதிதாசன்

இ) கம்பதாச்ன்.

45. உவமைக் கவிஞர் எனப் பாராட்டப்பட்டவர்

அ) சுப்பிரமணிய பாரதியார்

ஆ) சுரதா

இ) கண்ணதாதன்.

46. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தமிழன்னை விருது பெற்ற கவிஞர்

அ) அப்துல் ரகுமான்

ஆ) சுரதா

இ) தாரா பாரதி.

47. ‘கிறித்துவக் கம்பர்’ என்றழைக்கப்பட்டவர்

அ) வாணிதாசன்

ஆ) வீரமாமுனிவர்

இ) எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை.

48. சுந்தரர் தேவாரம்

அ) முதலாந் திருமுறை

ஆ) ஏழாந் திருமுறை

இ) பன்னிரண்டாந் திருமுறை.

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக : $2 + 2 = 4$

49. எந்நன்றி ................. உய்வுண்டாம் உய்வில்லை

செய்ந்நன்றி ................. மகற்கு.

50. அஞ்சுவ ................. பேதைமை அஞ்சுவ

தஞ்சல் ................. தொழில்.